# 3. நூறாண்டு வாழ்க

**அலகு அறிமுகம்**

ஆரோக்கியமான வாழ்வுக்குத் தனிநபர் சுத்தம் மிகவும் அவசியமானது. தனிநபர் சுத்தத்திற்கு வீடும் சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்க வேண்டும். மனிதனின் அலட்சியப் போக்கால் காற்று, நீர், வாயு மண்டலம் போன்றன அசுத்தமாகின்றன. சுத்தமான வீடு, குடிநீர், நல்ல உணவு, உடற்பயிற்சி. உடல்தூய்மை போன்றன மூலமே ஆரோக்கியமாக வாழமுடியும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த அலகு அமைக்கப்பட்டுள்ளது.

**இவ்வலகில் நான்கு துணை அலகுகள் உள்ளன**

- இனிய வாழ்வு (**பாடல்**)
- ஆனந்தனின் வீடு (**கதை**)
- காற்று வாங்கப் போனேன் (**கதை**)
- மரியாதைக்குரிய ஐயா!

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- குழந்தைப் பாடல்களைப் பாடுகிறார்கள்.
- விடுகதைகள், பழமொழிகள் எழுதுகிறார்கள்.
- அறிவிப்புப் பலகை தயார் செய்கிறார்கள்.
- எதிர்மறைச் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுகிறார்கள்.
- கதைகளிலுள்ள நிகழ்வுகளைக் கூறுகிறார்கள்.
- இலக்கண மரபுகளை அறிகிறார்கள்.

## அலகு வலைச்சட்டம்

| கருத்துகள் / திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| • பாடல்களைக் கேட்டு, ரசித்து தகுந்த மெட்டமைத்துப் பாடுதல்.<br>• விடுகதைகள், பழமொழிகளின் வாயிலாக ஆரோக்கியமான வாழ்வுக்கான கருத்துகளைப் பெறுதல்,<br>• படங்களின் வாயிலாகக் கருத்தைப் புரிந்து கொண்டு சுகாதாரப் பழக்கங்கள் பற்றிய குறிப்புகள் எழுதுதல்.<br>• பல்வேறு அறிவிப்புப் பலகைகளைப் பார்த்து இதன் அமைப்பையும், தேவையும் புரிந்து கொள்ளுதல்,<br>• பல்வேறு கதைகளை வாசித்தல், நிகழ்ச்சிகளை எளிய நடையில் கூறுதல்.<br>• மொழிச் செயல்பாடுகளின் மூலம் எதிர்மறைச் சொற்களை அறிதல். | • விருப்பமான பாடல் வரிகள் எழுதுதல்.<br>• தொடரை மாற்றி எழுதுதல்.<br>• பழமொழி விளக்கம் கூறுதல்.<br>• விடுகதை உருவாக்குதல்.<br>• பாடல் கருத்து கூறுதல்.<br>• கதை நிகழ்ச்சி கூறுதல்.<br>• படம் பார்த்துக் கருத்து கூறுதல்.<br>• அறிவிப்புப் பலகை தயாரித்தல்.<br>• மொழிச் செயல்பாட்டில் ஈடுபடுதல். | • குழந்தைப் பாடல்களைப் பாடுகிறார்கள், இரசிக்கிறார்கள்.<br>• விடுகதைகள், பழமொழிகள், கேட்கவும், சொல்லவும், எழுதவும் செய்கிறார்கள்.<br>• படங்களைப் பார்த்துக் குறிப்பு எழுதுகிறார்கள்.<br>• எளிய வாக்கியங்களில் அறிவிப்புப் பலகை தயார் செய்கிறார்கள்.<br>• வாக்கியங்களை வாசித்து எதிர்மறைச் சொற்களைக் கண்டறிகிறார்கள். எழுதுகிறார்கள்.<br>• கதைகளை வாசித்து நிகழ்வுகளைக் கூறுகிறார்கள். |



**இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் முற்றுப்பெற சுமார் 20 பிரிவேளைகள் தேவைப்படலாம்.**

**கற்றல் துணைக்கருவிகள்**

- **வீடுகளின் படங்கள் (உள்பகுதி)**
- **உடற்பயிற்சிகளின் படங்கள்**

## இனிய வாழ்வு

**வகுப்பறையில்...**

ஆசிரியர் குழந்தைகளிடம் அன்றாடச் செயல்களைப் பற்றி உரையாடல் நடத்தலாம்.

- **காலையில் எழுந்து என்னென்ன செய்தாய்?** எனக் கேட்கலாம்

பல்துலக்கினேன், குளித்தேன், போன்ற பதில்கள் வரலாம். இவ்வாறெல்லாம் ஏன் செய்கிறோம் எனக் கேட்கலாம். அவற்றின் அடிப்படையில் உரையாடலாம்.

- **என்னென்ன விளையாட்டுகள் விளையாடுவீர்கள்?** கேளுங்கள். குழந்தைகள் சொல்லும் பெயர்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

- ஓடிவிளையாடுதல்.
- கால்பந்து விளையாட்டு.
- கைப்பந்து விளையாட்டு.
- தொட்டு விளையாட்டு.
- கபடி விளையாட்டு.
- கண்பொத்தி விளையாட்டு.
- 
- 

- நாம் ஏன் விளையாட வேண்டும்?
- விளையாடினால் மட்டும் போதுமா?
- இவ்வாறு உரையாடலைத் தொடரலாம். குழந்தைகள் கூறும் கருத்துகளைக் கரும்பலகையில் எழுதுங்கள்.






## பாடி மகிழுங்கள்

- நாம் நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ வேண்டுமானால் வேறு என்னென்ன பழக்கவழக்ககங்களைக் கடைபிடிக்க வேண்டும்? என்று கேட்டு **இனிய வாழ்வு** பாடலை அறிமுகம் செய்யலாம்.
- ஆசிரியரின் சுவைக்கேற்ப வரிசையை மாற்றியமைத்தும் செயல்பாட்டைச் செய்யலாம்.

**பாடல்**

- குழந்தைகள் தனித்தனியாகப் பாடலை வாசித்தல்.
- மூன்றோ நான்கோ பேர் உள்ள குழுக்களாகப் பிரிதல்.
- குழுவில் மெட்டமைத்துப் பாடுதல்.
- குழுவில் குழந்தைகளின் பாங்களிப்பை உறுதி செய்தல்.
- நன்றாகப் பாடிய குழுவை ஆசிரியர் பாராட்டுதல்.
- சில குழந்தைகளைத் தனியாகவும் பாடச் செய்தல்.
- இறுதியில் ராக, தாள, பாவனையுடன் ஆசிரியர் பாடிக் காட்டுதல்.
- எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து பாடுதல்.



## எழுதுங்கள்

- விருப்பமான வரிகளை எழுதச் செய்தல்.
- விரும்புவதற்கான காரணம் கூறச் செய்தல்.
- பாடல் கருத்துகளை வரிசைப்படுத்தச் செய்தல்.



## கண்டறிந்து எழுதுங்கள்

- இது மொழிப் பயிற்சிக்காகக் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடு. வகுப்பறையில் ஆசிரியர் சில எதிர்ச்சொல் வரும்படியான சொற்களைப் பயன்படுத்தி வகுப்பறைச் செயல்பாடு மூலம் நேரிடையாக செய்து காட்டல்.

**எகா:** மேசை மீது புத்தகத்தை வைத்து கேள்வி கேட்டல், (**மேலே**, **கீழே**). மேசை அறையின் உள்ளே ஒரு பொருளை வைத்து கேள்வி கேட்டல்.

- இதுபோல் **(அது, இது) (பக்கத்தில், தூரத்தில்)** போன்ற சொற்களையும் பயன்படுத்தவும்.

- பாடப்புத்தகச் செயல்பாட்டைக் குழந்தைகள் தனியாக வாசித்தல்.
- வாசித்த பின் விடையை எழுதச் செய்தல்.
- இரண்டோ, மூன்றோ குழந்தைகளின் படைப்பை வகுப்பில் வெளியிடுதல்.
- ஆசிரியர் படைப்பை வெளியிடுதல்.
- குழந்தைகள் மேம்படுத்தி வெளியிடுதல்.
- படைப்புத் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

- **மாலை**யில் நடந்தே காட்டுக்கு வருவார்.
- குளித்து விட்டு **சுத்தமான** ஆடைகளை அணிந்து கொள்வான்.
- **இரவு**தான் வீடு திரும்புவார்.
- என் அப்பாவிற்கு **மகிழ்ச்சியாக** இருக்கும்.



## மாற்றி எழுதுங்கள்

**இது ஆண்பால், பெண்பால் மொழிக் கூறுகளை விளக்குவதற்கான செயல்பாடு.**

- செயல்பாட்டைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- **மகன், வருவான்**
  **மகள், வருவாள்** ஆகிய சொற்களை அடிக்கோடிட்டுக் காட்டுங்கள்.
- பின்னர் குழந்தைகளிடம் இரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கேட்டுக் கலந்துரையாடச் செய்யுங்கள்.
- தேவையானால் வேறுபாட்டை விளக்கிக் கூறலாம்.
- குழந்தைகள் செயல்பாட்டைத் தனியாக எழுதட்டும்.
- ஆசிரியர் உதவி செய்தல்.
- மேம்படுத்துதல்.

| | |
|---|---|
| மாணவன் **ஓடினான்** | - மாணவி **ஓடினாள்** |
| நடிகன் **நடித்தான்** | - நடிகை **நடித்தாள்** |
| சிறுவன் **விளையாடினான்** | - சிறுமி **விளையாடினாள்** |
| வேலைக்காரன் **காப்பாற்றினான்** | - வேலைக்காரி **காப்பாற்றினாள்** |



## பழமொழி எழுதுங்கள்

சில பழமொழிகளை ஆசிரியர் வகுப்பறையில் எழுதித் தொங்க விடவும். இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசிக்கவும்.

ஆயிரம் நோய்களுக்கு அரைக்கொசு

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

கொசு கடித்தால் கோடாங்கியும் விழுவார்

**பழமொழிச் செயல்பாட்டினை நடத்தும் போது ஆசிரியர் கவனிக்க வேண்டியன.**

- அனுபவத்தின் வெளியீடாக இருக்க வேண்டும்.
- எளிமையாக இருக்க வேண்டும்.
- புரிந்து கொள்ளும்படியாகச் சுருக்கமாக இருக்க வேண்டும்.
- தெளிவாக இருக்க வேண்டும்.
- பொருளை அல்லது நிகழ்வை ஆதாரமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஒப்புமையைக் குறிப்பிடும்படியாக இருக்க வேண்டும்.
- எதுகை, மோனை அழகுடன் இருக்க வேண்டும்.

**பழமொழிகளைப் பற்றி மாணவர்களிடம் உரையாடல்**

- குழந்தைகளுக்குத் தெரிந்த பழமொழிகளைக் கூறச் செய்து அட்டைத் தாளில் எழுதுங்கள்.
- நீங்கள் கூறிய பழமொழிகளில் உடல் ஆரோக்கியத்தோடு தொடர்புடைய பழமொழிகள் எது? எனக் கேட்டல்.
- இத்தகைய சில பழமொழிகள் பாடப்புத்தகத்தில் உண்டு எனக்கூறிச் செயல்பாட்டைச் செய்யச் சொல்லலாமே.

- படத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டுபிடித்து எழுதச் செய்தல்.
- படத்தைப் பார்த்துப் பழமொழியின் விளக்கத்தைக் கூறி எழுதச் செய்தல்.
- ஆசிரியர் உதவியுடன் குறிப்பேட்டில் எழுதுதல்.
- இதுபோன்ற பழமொழிகளைச் சேகரித்தல்.
- எனது பழமொழி என்ற தொகுப்பை வகுப்பில் வெளியிடச் செய்தல்.

**சுகாதாரப் பழமொழிகள்**

- ஆயிரம் நோய்களுக்கு அரைக் கொசு.
- கொசு கடித்தால் கோடாங்கியும் விழுவான்.
- சுத்தமில்லாத ஊரில் கொசு அரசன்.
- வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும்.
- தூய்மை நாட்டுக்குத் தேவை.
- சுத்தம் சோறு போடும்.
- அதிகாலை நீராடி ஆயுளைப் பெருக்குவோம்.
- தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
- காகம் கண்டறியும் கொக்கு கொண்டறியும்.
- கந்தையானாலும் கசக்கிக் கட்டு. கூழானாலும் குளித்துக் குடி.
- தங்கப் படுக்கையென்றாலும் நோயாளிக்கு உதவாது.



## விடை கண்டுபிடியுங்கள்

ஆசிரியர், குழந்தைகளிடம் சில விடுகதைகளைக் கூறலாம். தெரிந்த குழந்தைகளிடம் விடைகூறச் சொல்லலாம். இதுபோன்று உடல்தூய்மையுடன் தொடர்புடைய விடுகதைகளும் உண்டு எனக்கூறிச் செயல்பாட்டைத் தொடங்கலாம். வீட்டிலுள்ள பெரியவர்களிடம் கேட்டு விடுகதைகளை எழுதிவரச் சொல்லலாம். வகுப்பில் வாசிக்கலாம். படைப்புத் தொகுப்பில் சேர்க்கவும்.



## கருத்து எழுதுங்கள்

**இச்செயல்பாட்டை நடத்தும்போது ஆசிரியர் கவனிக்க வேண்டியவை**

- பாடலின் கருத்தைக் குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? எனவே இந்தக் குறிப்புகளைக் கவனிக்கவும்.
- பாடலை இரண்டு மூன்று முறை வாசிக்கட்டும்.
- அதிலிருந்து வினாக்கள் உருவாக்கட்டும்.
- அதனுடைய விடையைப் பிறகுழந்தைகளிடம் கேட்கட்டும்.
- தெரிந்த குழந்தைகள் பதில் சொல்லட்டும்.
- விடைகளைத் தொகுத்து வரிசைப்படுத்தி பாடலின் மொத்தக் கருத்தை எழுதட்டும்.
- குழுக்களாகப் பிரிந்து மேம்படுத்தட்டும்.
- மீண்டும் எழுதி வாசிக்கட்டும்.
- நன்றாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதிய குழந்தைகளைப் பாராட்டவும்.

# ஆனந்தன் வீடு



## குறிப்பு எழுதுங்கள்

ஆசிரியர் பாடத்துடன் தொடர்புடைய சில வரைபடங்களை அறிமுகப்படுத்தலாம். குழந்தைகள் கருத்துகளைக் கூறட்டும். படங்களை ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லவும். படத்தைப் பற்றி உரையாடல் நடத்தலாம். பின்னர் பாடப்பகுதியை வாசித்துப் பார்க்கச் சொல்லவும். வாசிப்பு உத்திகளைக் கையாளவும். படங்களைப் பற்றி குறிப்புகளை எழுதத் தேவையான செயல்பாடுகளைத் தனியாகவும், குழுவாகவும் நடத்துங்கள்.

- மேம்படுத்தலுக்குப்பின் படைப்புத் தொகுப்பில் சேர்க்கலாம்.
- தொடர்ந்து தமது வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படி எனக் கலைந்துரையாடிக் கருத்துகளை எழுதச் சொல்லலாம்.



## அறிவிப்புப் பலகை தயாரியுங்கள்

சுற்றுப்புறம் தூய்மையாக இருக்க வேண்டுமானால் என்னென்ன செய்யலாம்? இதன் அடிப்படையில் கலந்துரையாடல் நடத்தலாம். குழந்தைகளுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்து **(பசை, அட்டை)** அறிவிப்புப் பலகை தயார் செய்யலாம்.

**சில அவிறிப்புப் பலகைகள்**






## நிரப்புங்கள்

- எழுத்துப் பிழை செய்யும் குழந்தைகளைக் கண்டறிந்து பிழைகளைத் திருத்துவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடாகும். இதுபோன்ற பிற பயிற்சிகளையும் கொடுத்துக் குழந்தைகளின் பிழைகளைத் திருத்தலாம்.
- இதேபோன்று பிரபு எழுதிய அன்றாடச் செயல்களில் காணப்படும் பிழைகளையும் திருத்தி எழுதலாம்.

## காற்று வாங்கப் போனேன்

### வகுப்பறையில்

- உங்களுக்கு உடற்பயிற்சி செய்யும் பழக்கமுண்டா? வேறு யாராவது உடற்பயிற்சி செய்வதைப் பார்த்துள்ளீர்களா?

இதுபோன்ற கேள்விகளைக் குழந்தைகளிடம் கேளுங்கள். அவர்கள் கூறும் கருத்துகளின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள். உடற்பயிற்சி செய்வதன் அவசியம் என்ன? பாடப்பகுதியில் உடற்பயிற்சியின் தேவையைப் பற்றி என்ன சொல்லப்பட்டுள்ளது? வாசித்துப் பாருங்கள் எனக் கூறி பாடப்பகுதிக்குள் நுழையலாம்.



### கூறுங்கள்

பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளைக் குறிப்பேடுகளில் வரிசையாக எழுதச் சொல்லுங்கள். குழுவில் மேம்படுத்தச் செய்யலாம். இறுதியில் தனித்தனியாக வகுப்பில் வாசிக்கச் சொல்லலாம். பின்னர் படைப்புத் தொகுப்பில் சேர்க்கலாம்.



### பொருத்தமான சொல்லை எழுதுங்கள்

தனிநபர் சுத்தத்தோடு தொடர்புடைய அன்றாடச் செயல்களைக் குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டும். தேவையான ஆலோசனைகளைக் கூறுங்கள். குழந்தைகள் செயல்பாட்டைச் செய்யட்டும். பின்னர் குழந்தைகளை வகுப்பில் வாசிக்கச் சொல்லலாம்.

- தினமும் இரண்டு வேளை **குளிக்க** வேண்டும்.
- உண்ணுவதற்கு முன் கைகளைக் **கழுவ** வேண்டும்.
- தினமும் இரண்டுவேளை பல்லைத் **துலக்குதல்** வேண்டும்.
- கந்தைத் துணி ஆனாலும் **துவைத்து** அணிய வேண்டும்.



### கண்டுபிடியுங்கள்

கட்டத்திற்குக் கீழே உள்ள செயல்களைக் குழந்தைகள் வாசிக்கலாம். ஒவ்வொரு செயலுக்கும் ஆம் என்ற பதில் வரலாம். அப்படியானால் கட்டத்திலுள்ள எண்ணை வண்ணம் தீட்டலாம். எல்லாக் குறிப்புகளையும் வாசித்துக் கட்டங்களிலுள்ள எண்களை வண்ணம் தீட்டிப் படத்திலுள்ளது யார்? எனக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள். செயல்பாட்டை நடத்துங்கள்.

# மரியாதைக்குரிய ஐயா!

## வகுப்பறையில்

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுதலாம்.

- **என்னுடைய அப்பா நேற்று பண்டம் வாங்கி வந்தது.**
- **எங்கள் வீட்டு நாய் வேகமாக ஓடினார்.**
- **எங்கள் தோட்டத்தில் இரண்டு குருவிகள் கூடுகட்டினார்கள்.**

குழந்தைகளை வாசிக்கச் சொல்லலாம். பிறகு எழுதியிருப்பது சரியா? எனக் கேட்லாம். திருத்த முடியுமா எனக் கேளுங்கள். சில குழந்தைகளாவது சரியாக எழுதலாமல்லவா? பின்னர் பாடப்பகுதியில் ஓர் ஆசிரியர் என்ன சொல்கிறார் பாருங்கள் எனப் பாடப்பகுதியை வாசிக்கச் சொல்லுங்கள். உயர்திணை, அஃறிணை பற்றிய அறிவு பெற்றனரா? பரிசோதிக்கலாமே.

## குழந்தைகளை இரண்டு குழுவாக்கலாம்.

- ஒவ்வொரு குழுவும் உயர்திணை அஃறிணைப் பொருட்களைத் தனித்தனியாக எழுதட்டும். வகுப்பில் வெளியிடட்டும்.
- அதிகமாகச் சொற்கள் எழுதி வெளியிட்ட குழுவைப் பாராட்டலாம்.
- குழு மதிப்பீடு செய்யுங்கள்.
- படைப்புத் தொகுப்பில் சேர்க்கலாம்.

| **உயர்திணை** | |
|---|---|
| கடவுள் | மாமா |
| மனிதன் | அத்தை |
| மருத்துவர் | துணி தைப்பவர் |
| ஆசிரியர் | கொத்தனார் |
| ஓட்டுநர் | விவசாயி |
| அமைச்சர் | பாதிரியார் |
| மாணவர் | சாமியார் |
| மாணவி | துறவி |
| | பக்தன் |
| | செவிலியர் |

| **அஃறிணை** | | |
|---|---|---|
| யானை | நரி | மைனா |
| புலி | மீன் | பூனை |
| சிங்கம் | பாம்பு | வாத்து |
| காகம் | பல்லி | தென்னை |
| மா | ஓணான் | மரம் |
| பலா | பந்து | செடி |
| கோழி | ஒட்டகம் | கொடி |
| கொக்கு | பூச்சி | புத்தகம் |
| | மலை | பேனா |
| | ஆறு | |

# அலகு மதிப்பீடு

| மண்டலங்கள் | தரம் |
|---|---|
| படம் பார்த்துக் கருத்து எழுதுதல் | |
| நிகழ்ச்சி எழுதுதல் | |
| தொடர் மாற்றி எழுதுதல் | |
| விடுகதைகள் எழுதுதல் | |

## கருத்து எழுதுங்கள்

சுத்தமான இடம், அசுத்தமான இடம் என இரண்டு படங்களைக் காட்டுங்கள். படத்தைப் பார்த்துக் கருத்தை எழுதுதல்.

## நிகழ்ச்சி எழுதுதல்

கொடுக்கப்பட்ட பத்தியைக் கரும்பலகையில் எழுதுங்கள். வாசித்து நிகழ்ச்சிகளை எழுதுதல்.

**கதிரவன் படிக்கும் ஆரம்பப் பள்ளியில் தினமும் மதிய உணவு கொடுப்பது வழக்கம். இன்றுமுதல் தினமும் சாம்பாரும் சாதமும் கொடுக்கத் தீர்மானித்தனர். அங்குவிளையும் காய்கறிகளைப்பயன்படுத்தி உணவு சமைத்துப் போடத் தீர்மானித்தனர். இதற்காக பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டம் கூடினர். அங்கத்தினர்கள் எல்லோரும் தேவையான காய்கறிகளை வாங்கிக் கொடுக்கத் தீர்மானித்தனர்.**

## தொடர் மாற்றி எழுதுங்கள்

- காலையில் பயணம் பேருந்தில் குமார் செய்வான்
- பாடங்கள் படிப்பான் நன்றாக தினமும்
- தினமும் ஆடைகள் சுத்தமான அணிவான்

## கீழ் வரும் சொற்கள் விடையாக வரும் விடுகதைகள் எழுதுங்கள்

நாற்காலி | ஆடை | கண் | பலாப் பழம்